www.Padasalai.Net www.CBSEtips.in

Tsi-9T

**தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்**
**காலாண்டுப் பொதுத் தேர்வு - செப்டம்பர் 2022**

## வகுப்பு 9

காலம்: 3.00 மணி | **தமிழ்** | மதிப்பெண்கள்: 100

**குறிப்பு: i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.**
**ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.**

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக:** 15×1=15

1) காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! - எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! .... இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்
அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) எதுகை, மோனை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

2) விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.
(i) ............ இனம் (ii) வண்ணம் ............
(iii) ............ குணம் (iv) வனப்பு ............
அ) மூன்று, நூறு, பத்து, எட்டு ஆ) எட்டு, நூறு, பத்து, மூன்று
இ) பத்து, நூறு, எட்டு, மூன்று ஈ) நூறு, பத்து, எட்டு, மூன்று

3) <u>அழியா</u> வனப்பு, <u>ஒழியா</u> வனப்பு, <u>சிந்தா</u> மணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு
அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

4) **பொருத்தமான வினையை எடுத்து எழுதுக:**
கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக .................
அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் .................
அ) வந்தான், வருகிறான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை
இ) வந்தான், வருவான் ஈ) வருவான், வரமாட்டான்

5) 'விசனம்' - சொல் தரும் பொருள் ..............
அ) வேதனை ஆ) மகிழ்ச்சி இ) ஏக்கம் ஈ) கவலை

6) பொருந்தாத இணை எது?
அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்

7) முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.
அ) தமிழர்களின் வீர விளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்.
ஆ) தொன்மையான வீர விளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்.
இ) தமிழர்களின் வீர விளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான.
ஈ) தமிழர்களின் தொன்மையான வீர விளையாட்டு ஏறுதழுவுதல்

8) ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்
இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

9) தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
அ) தேசியத் திறனாய்வுத் தேர்வு ஆ) ஊரகத் திறனாய்வுத் தேர்வு
இ) தேசிய திறனாய்வு மற்றும் கல்வி உதவித்தொகைத் தேர்வு
ஈ) மூன்றும் சரி

10) **பின்வரும் தொடர்களைப் படித்து 'நான்' யார் என்று கண்டுபிடிக்க.**
அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்
எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன்
இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர்.
அ) இணையம் ஆ) தமிழ் இ) கணினி ஈ) ஏவுகணை

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

11) 'அவன் திருந்தினான்' எவ்வகைத் தொடர்?

அ) செய்வினைத்தொடர் ஆ) தன்வினைத்தொடர்

இ) வினாத்தொடர் ஈ) பிறவினைத்தொடர்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

''தண்மணற் பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின்
ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்''

12) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

அ) பெரியபுராணம் ஆ) மணிமேகலை

இ) சீவகசிந்தாமணி ஈ) சிலப்பதிகாரம்

13) இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) சேக்கிழார் ஆ) குடபுலவியனார்

இ) சீத்தலைச்சாத்தனார் ஈ) இளங்கோவடிகள்

14) பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்கள் யாவை?

அ) தண்மணற் - புண்ணிய ஆ) தண்மணற் - தாழ்தரு

இ) ஒட்டிய - உறுபொருள் ஈ) புண்ணிய - பொருந்துமின்

15) தண் - என்பதன் பொருள் யாது?

அ) தண்ணீர் ஆ) வெப்பம் இ) குளிர்ச்சி ஈ) சிறப்பு

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:** 4×2=8

**(21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

16) **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க:**

அ) அடுத்த உலகப் போர் என்று உருவாகினால் அது தண்ணீருக்காகத்தான் உருவாகும்.

ஆ) ஹாங்க் மாக்னஸ்கி என்பவர் கணினி மூலம் தொலைநகல் எடுக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தார்.

17) ''கூவல்'' என்று அழைக்கப்படுவது எது?

18) நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

19) ''அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் - அவை அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்'' - இலக்கியங்களின் பாடுபொருள்களாக இவ்வரிகள் உணர்த்துவன யாவை?

20) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்பு தருக.

21) 'தரும்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:** 5×2=10

22) வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.

23) **அடைப்புக்குள் உள்ள சொல்லைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றுக:**

அ) இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ............. (திகழ்)

ஆ) வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் ............. (கலந்துகொள்)

24) **தொடர் தரும் பொருளைக் கூறுக:**

சின்னக்கொடி - சின்னகொடி

25) **கலைச்சொற்கள் தருக:**

Irrigation Technology, Herostones

26) மரபு **இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:**

அ) நகமும் சதையும் ஆ) கண்ணும் கருத்தும

www.Padasalai.Net www.CBSEtips.in



27) தமிழ் எண்களில் எழுதுக:

அ) உன் வகுப்பு மாணவர் எண்ணிக்கை .............

ஆ) திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் .............

28) 'கொள்வார்' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க: 2×3=6

29) அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

30) வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.

31) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:

சிந்துவெளி நாகரிக வரலாற்றிலும் காளை முக்கியப் பங்கு வகிக்கின்றது. இம்மக்கள் காளையைத் தெய்வமாக வழிபட்டதை அகழாய்வில் கிடைக்கப்பெற்ற சான்றுகள் வாயிலாக அறிகிறோம். சிந்துவெளி அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட மாடு தழுவும் கல் முத்திரை ஒன்று ஏறு தழுவுதலைக் குறிப்பதாக ஐராவதம் மகாதேவன் தெரிவித்துள்ளார்.

அ) சிந்துவெளி நாகரிக வரலாற்றில் முக்கியப் பங்கு வகிப்பது எது?

ஆ) சிந்துவெளி மக்கள் காளையைத் தெய்வமாக வழிபட்டதை எதன்மூலம் அறியலாம்?

இ) சிந்துவெளி அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட பொருள்களில் ஒன்று?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க: 2×3=6

34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32) நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியார் கூறும் வழிகள் யாவை?

33) உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

34) அடிபிறழாமல் எழுதுக:

அ) ''நீர்இன்று'' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

(அல்லது)

ஆ) ''அறிவியல் என்னும்'' எனத் தொடங்கும் ஓ, என் சமகாலத் தோழர்களே! பாடல்.

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க: 2×3=6

35) தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36) பொருத்தமான துணை வினைகளைப் பயன்படுத்துக:

அ) மனிதனையும் விலங்குகளையும் (வேறு) ................ மொழியாகும்.

ஆ) திராவிட மொழிகள் சில, பொதுப் பண்புகளை (பெறு) ................

இ) காலந்தோறும் தன்னைப் (புதுப்பித்து) ................ மொழி தமிழ்.

37) வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 5×5=25

38) அ) 'தூது அனுப்பத் தமிழே சிறந்தது' - தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

39) அ) உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின், ''கால்முளைத்த கதைகள்'' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

(அல்லது)

ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:



41) உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவிற்கான அழைப்பிதழ் ஒன்றினை வடிவமைக்க.

42) அ) என் பெற்றோர் மகிழுமாறு நான் செய்ய வேண்டியது.

என் வீட்டின் நிலையறிந்து, தேவையறிந்து பொருள்கள் வாங்குவது.

அலைபேசிப் பயன்பாட்டினைப் பத்து நிமிடங்களுக்கு மேல் நீட்டிக்காமல் இருப்பது.

தொலைக்காட்சி பார்ப்பதைக் குறிப்பிட்ட நேரமாகக் குறைத்துக் கொள்வது.

1.

2.

3.

4.

5.

(அல்லது)

ஆ) **மொழிபெயர்க்க:**

Every flower is a soul blossoming in nature - Gerard De Nerval.

Sunset is still my favourite colour, and rainbow is second - Mattie Stepanek.

An early morning walk is a blessing for the whole day - Henry David Toreau.

Just living is not enough ........ one must have sunshine, freedom and a little flower - Hans Christian Anderson.

சிவக்குமார், மு.
பரிராம் மெட்ரிக் மே.நி.ப
அல்லம் - 627809.

**பகுதி - V (மதிப்பெண்கள் : 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க:** **3×8=24**

43) அ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க. **(அல்லது)**

ஆ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

44) அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

(அல்லது)

ஆ) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

45) அ) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக:**

முன்னுரை - நீரின்றி அமையாது உலகு - நீரின் இன்றியமையாமை - நீர் நிலைகள் - நீர்ப்பற்றாக்குறை - நீரைச்சேமித்தல் - முடிவுரை.

(அல்லது)

ஆ) முன்னுரை - கணினி - வகைகள் - இணையம் - பயன்கள் - முடிவுரை.

----------

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593